சேலத்தில் அறநிலையத்துறை துணை ஆணையர் அலுவலகம்.

778—(*வினா எண் 5176) திரு. செ. செம்மலை : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலத்தில் இந்து சமய அறநிலையத்துறை துணை ஆணையர் அலுவலகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : சேலத்தில் அறநிலையத்துறை துணை ஆணையாளர் அலுவலகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 779 மற்றும் 780 மாண்புமிகு தொழில் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

புளியம்பட்டி அரசு மகளிர் உயர்நிலைப்பள்ளி.

781—(*வினா எண் 4308) திரு. வே. கு. சின்னசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரியார் மாவட்டம், புன்செய்ப் புளியம்பட்டியில் உள்ள அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளிக்காக வாங்கப்பட்ட ஆறு ஏக்கர் நிலத்தில் கட்டடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(இ) எப்போது வேலை துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ), (ஆ) மற்றும் (இ): இப்பள்ளிக்கு இவ்வாண்டு (1985–86) தமிழ் நாட்டுப்பாட நூல் நிறுவனம் வழங்கிய நன்கொடைத் தொகையிலிருந்து ரூ. 1.50 இலட்சம் செலவில் இரு வகுப்பு அறைகள் கட்ட பள்ளிக் கல்வி இயக்குநர் அளவில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்பணியை உடனடியாகத் தொடங்குமாறு கட்டடத்துறை தலைமைப் பொறியாளருக்குப் பள்ளிக் கல்வி இயக்குநரால் வேண்டுகோள் விடுவிக்கப்பட்டுள்ளது.

நாடகத் தமிழை ஊக்குவித்தல்

782—(*வினா எண் 4651) திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—